டார்கள். என்றாலும், அப்படிக் குறைக்கப்பட்டிருந்தால், ஏற்கனவே அவர்கள் என்ன சம்பளம் பெற்றிருந்தார்களோ அதே சம்பளம் மீண்டும் அவர்களுக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, குறைக்கப்படவில்லை என்று குறிப்பிட்டேன்.

These officers were allowed to draw the pay last drawn by them in the Information Department.

அவர்கள் அந்த வேலையைவிட்டு நீக்கப்படுவதற்கு முன்பு என்ன சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தார்களோ அதே சம்பளம் தரப் படுகிறது என்ற அளவுக்குத்தான் குறிப்பு இருக்கிறது.

திரு. கே. விநயகம் : மாவட்ட விளம்பர அதிகாரிகள், கவர்ன் மென்ட் டூரிஸ்ட் ஹோம் ரிசப்ஷன் அதிகாரி ஆகிய இரு பதவிகளின் தரமும் ஒன்று-தானா ? டூரிஸ்ட் ஹோம் ரிசப்ஷன் அதிகாரியின் தரம் குறைவு அல்லவா ? முன்பிருந்த அதிகாரி வாங்கிக்கொண்டிருந்த சம்பளத்தைவிட இப்பொழுது இருக்கும் அதிகாரி குறைவாக வாங்குகிறார் என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? குறிப்பாக, மதுரையில் இருக்கும் கவர்ன்மென்ட் ரெஸ்ட்ஹவுஸ் அதிகாரியைக் குறித்து நான் கேள்வி போடுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாவட்ட விளம்பர அதிகாரிகள் நீக்கப்பட்ட பிறகு அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் பொதுக் கல்வி—செய்தி அதிகாரியாக எடுத்துக்கொள்ளப்பட்ட தன்மையைக் குறிப்பிட்டேன். குடும்ப நலத் திட்டத்தின்கீழ் அவர்களுடைய சம்பளம் கொடுக்கப் படுகிறது. கவர்ன்மென்ட் டூரிஸ்ட் ஹவுஸ் பற்றியக் கேள்வியை அதற்குரிய அமைச்சரிடத்தில் போட்டால் அவர் பதில் சொல்ல முடியும். குடும்பநலத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட மூவரைக் குறித்துத்தான் நான் கூறிய கருத்துக்கள் இங்கே பயன்படும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, மாவட்ட விளம்பர அதிகாரிகளாக இருந்தவர்கள் புதிதாக வேறு பதவியில் நியமிக்கப் பட்டிருக்கிறார்களே அந்தப் பதவி நிரந்தரமானதா, அல்லது டெம்பரரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது வழங்கப்பட்டிருக்கிற பதவிகள் நிரந்தரமான பதவிகளாகும்.

* 140 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the post of Assistant Editor in Family Planning in the Directorate of Health Services and Family Planning was filled up in 1969; and

(*b*) how long that post was kept vacant ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இந்த வேலை சுமாராக இரண்டு ஆண்டு காலம் காலியாக இருந்தது.

1970 ஆகஸ்ட் 31]

திரு. கே. விநயகம் : இந்த அஸிஸ்டென்ட் எடிடர் இன் ஃபாமிலி ப்ளானிங் என்கிற பதவி ஏன் இரண்டாண்டுக் காலமாகக் காலியாக இருந்தது ? அதற்கு முன்னே இருந்தவர்கள் தொடர்ந்து இருந்தார்களா ? அவரை ஏன் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, இந்த வேலையைக் காலியாக வைத்திருந்தார்கள், பிறகு யாரை நியமித்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 20—9—1967–இல்தான் வேலை, இந்திய அரசால் சாங்ஷன் செய்யப்பட்டது. சாங்ஷன் செய்யப்பட்டதிலிருந்து யாரும் போடப்படவில்லை. அந்தப் பதவியைப் பயன்படுத்து-வதா இல்லையா என்ற அளவில் அந்தப் பதவியை அப்படியே வைத்துக் கொண்டிருந்தார்கள். குடும்ப நலத் திட்டத்தின் பணிகள், மற்றவைகள் விரிவாக்கப்பட்ட நிலையில் அதுபற்றி வெளியீடுகள் வெளியிடவேண்டிய அவசியம் என்ற காரணத்தால் நியமிக்கவேண்டும் என்ற அளவுக்கு 1—8—1969-ல் துணை ஆசிரியர் பதவி அப்பொழுதுதான் ஒருவருக்குத் தற்காலிகமாகக் கொடுக்கப்பட்டது. அந்த வகையில் இரண்டு ஆண்டுக் காலத்திற்கு நாமாக நிறுத்தினோமே தவிர, ஏற்கனவே இருந்துவருவதை எடுத்துவிடவில்லை.

எஸ். எஸ். எல். சி. பாடமுறை

* 141 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்துக் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புகளில் தற்போத-ள்ள பாட முறையையே அமல் படுத்தவோ, அல்லது மாற்றி அமைக்கவோ செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, நடப்பாண்டில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கு அனுப்பப்பட்ட மாணவர்களில், சில பள்ளிக்கூடங்களில் ஒரு மாணவன் கூடத் தேர்வுபெறுத நிலைமை தமிழகத்தில் இருந்திருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அந்த வகையில் மாணவர் ஒருவரும் தேர்வுறுமல் இருந்ததற்குக் காரணம் பாட முறையில் உள்ள குற்றமா, கற்றுக்கொடுத்த ஆசிரியர்கள் குற்றமா, மாணவர்களுடைய குற்றமா என்பதை அலசிப் பார்ப்பதற்கு ஏதாவது ஒரு வழியை அரசு வகுத்திருக்கிறதா என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாட முறையை அமல்படுத்துவது அல்லது மாற்றியமைப்பது பற்றியது மூலக் கேள்வி. இது மூலக்கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை.

திரு. கே. விநயகம் : கல்விமுறையைத் திருத்தியமைக்கவேண்டும் என்று ஜனதிபதியிலிருந்து யாராவது கொஞ்சம் கல்வி தெரிந்தவர் வரை சொல்லிக்கொண்டே வருகிருர்களே, இதை எப்பொழுதுதான் திருத்தியமைக்கப் போகிறீர்கள்? அல்லது இருக்கிற ஸிலபஸ்ஸே